**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.1/2018** D.W. 1

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திரு. ஈஸ்வரன் | Caste: |
| Father's Name . பாண்டியன் | Calling: விவசாயம் கூலி |
| Village :. பழனி | Religion: இந்து |
| Taluk : | Age . |
| Date : 03.07.2023 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 03.07.2023

(Accused present..)

**முதல் விசாரணை**.

நான் இந்த வழக்கில் 2 வது எதிரி. இந்த வழக்கில் நான் எந்த குற்றமும் செய்யவில்லை. சுகன்யாதான் அவருடைய குழந்தையை கொடுத்தார். சுகன்யா காதல் திருமணம் செய்ததால் அவரது வீட்டில் சேர்க்கவில்லை என்று தற்கொலை செய்து கொள்ளபோய் நாங்கள் காப்பாற்றி அறிவுரை சொன்னோம். அவரது அப்பா அம்மாவிற்கு தகவல் சொன்னோம் அவர் வீட்டிற்கு போகமுடியாது என்று சொன்னார். அவர் ஊருக்கு பக்கத்தில் உள்ள புளியம்பட்டி அந்தோணியார் கோவில் பக்கத்தில் வைத்து சுகன்யாவின் பெற்றோரிடம் சுகன்யாவையும் அவரது குழந்தையையும் ஒப்படைத்துவிட்டு வந்துவிட்டோம். 10 நாட்கள் கழித்து மறுபடியும் பழனிக்கு வந்தார்கள். போனில் எனக்கு அவரது அம்மா அண்ணி எல்லோரும் பேசுவார்கள். நாங்கள் பழனியில் இருப்பதால் சுகன்யா பழனிக்கு வருவதாக எங்களிடம் தகவல் சொன்னார்கள். பழனிக்கு வந்து குழந்தையை நீங்கள் பார்த்துக்கொள்ளுங்கள் நாங்களும் அடிக்கடி வந்து பார்த்துகொள்கிறோம் சுகன்யா எங்காவது வேலைக்கு போகட்டும் என்று அவரது அம்மா சொன்னார். இந்த சம்பவம் 27.11.2015 ம் தேதி நடந்தது. நான் குழந்தையை கொடுத்தால் ஏதாவது பிரச்சனையாகிவிடும் உங்கள் வீட்டில் வந்து கேட்டால் என்ன சொல்வது என்று சொல்லி எழுத்து மூலமாக எழுதிக்கொடுக்க சொன்னேன். அவரும் எழுதிக்கொடுத்தார். அதை பாதுகாப்பிற்காக நானே வைத்துக்கொண்டேன். 2017 ம் வருடம் வரை நான்தான் அந்த குழந்தையை வளர்த்தேன். சுகன்யாவும் அவரது அம்மாவும் என் தகப்பனாரை பார்த்து குழந்தைக்காக காசு கேட்டார்கள் அவர் காசு கொடுக்கமுடிாது என்று வேகமாக பேசியதால் போடி போலிஸ் ஸ்டேஷன் போய் புகார் கொடுத்தார்கள். அங்கு அவர்கள் புகாரை எடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதன் பிறகுதான் இந்த பொய் புகாரை கொடுத்தார்கள். சுகன்யான எங்களிடம் குழந்தையை கொடுக்கும்போது எழுதிக்கொடுத்த பேப்பரை நான் வைத்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். கைரேகையும் வைத்தேன். அதேபோல் சாட்சிகள் முன்னிலையில் சுகன்யாவும் கையெழுத்தும் கைரேகையும் போட்டார்.

**C.C.1/2018** D.W. 2

அந்த ஆவணத்தை குறியீடு செய்ய கொடுத்திருக்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்களை சுகன்யாவின் கையெழுத்தோடு ஒப்பிட்டு பார்க்க நடவடிக்கை எடுக்கவும் தயாராக இருக்கிறேன். ( அரசு தரப்பில் அந்த ஆவணம் சட்டப்படியான ஆவணம் இல்லை என்றும் இந்த ஆவணத்தின் மூலம் குழந்தையை தத்துக்கொடுக்க முடியாது என்றும் அதில் உள்ள கையெழுத்தும் கைரேகையும் அவருடையதுதானா என்று சுகன்யாவை வைத்துதான் முடிவு செய்ய முடியும் என்றும் அது சட்டப்படி குறியீடு செய்யதக்க ஆவணம் இல்லை என்றும் கடுமையாக ஆட்சேபிக்கப்பட்டது.)

ஆட்சேபனையை கருத்தில் கொண்டும் ஆவணத்தை பரிசிலினை செய்து பார்த்தபோது ஆவணமானது ஸ்வீகார பத்திரமாக எழுதப்படவில்லை ஆனால் ஆவணம் அசல் ஆவணம் கையெழுத்தும் கைரேகையும் இடப்பட்டுள்ளது எனவே ஆட்சேபனையுடன் எமசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த ஆவணம் எழுதி வாங்கும்போது இப்படி பிரச்சனை வரும் என்று எனக்கு தெரியவில்லை. சுகன்யா என்னிடம் குழந்தையை கொடுத்த விபரம் அவரது அம்மாவிற்கும் தெரியும். அவராக சம்மதித்துதான் குழந்தையை என்னிடம் கொடுத்தார். நானும் என் மனைவியும் குழந்தையை கடத்தவோ அல்லது சட்டத்திற்கு புறம்பாக எதுவும் செய்யவில்லை. எங்கள் மீது பொய்யாக வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. எங்களை விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**மறுவிசாரணை இல்லை.**